ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

75 අංක — 1973 අගෝස්තු 31 වැනි සිකුරාදා — 1973.08.31

75 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (III) — வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 175 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | 178 | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. .. | — |


**கவனிக்க.**—மகாநுவர பௌத்த இளைஞர் கழகம் சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொது மக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் 9 மணி தொடக்கம் 3 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### அ அல்லது ஆ பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் அ பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் ஆ பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் ஆ என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*எல். டபிள்யூ. பீ பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்,*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

---

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம் பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

(1) வியாபாரச் சின்னம் இல : 32085. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவெம்பர் மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : இம்பீரியல் ஹெமிக்கல் இன்டஸ்றீஸ் லிமிட்டட், இம்பீரியல் ஹெமிக்கல் ஹவுஸ், மில்பாங், லண்டன் எஸ். டபிள்யூ 1, இங்கிலாந்து ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : ஹெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட், த. பெ. இல. 352, கொழும்பு. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச் சரக்கு : நெசவு செய்த துணியில் நீர் உட்புகாத வண்ணம் பூசப்படுகின்ற கலவை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DIPSANIL**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ௵ நொவெம்பர் ௴ 14 ந் உ.

8–1201/1—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல : 32081. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவெம்பர் மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : இம்பீரியல் ஹெமிக்கல் இன்டஸ்றீஸ் லிமிட்டட், இம்பீரியல் ஹெமிக்கல் ஹவுஸ், மில்பாங், லண்டன் எஸ். டபிள்யூ 1, இங்கிலாந்து ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : ஹெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட், த. பெ. இல. 352, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச் சரக்கு : கைத்தொழிலில் உபயோகிப்பதற்கான இரசாயன ஆக்கப் பொருட்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**SOLIVAP**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ௵ செப்டெம்பர் ௴ 11 ந் உ.

8–1201/2—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32967. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 3 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஹென்ற்லி காமென்ற்ஸ் லிமிட்டட் ; (இலங்கையின் கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் முறையாக இணைக்கப்பட்டதோர் கம்பெனி) இல. 10, பழைய விமான நிலைய வீதி, இரத்மலானை ; உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : ஜே. ஈ. செனிவிரத்ன அவர்கள், கொள்ளுப்பிட்டிய ஒழுங்கை, கொழும்பு 3. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச் சரக்கு : மற்ற வகுப்புகளினுள்ளடங்காத யானைத் தந்தங்களினால் அல்லது மரம், புல், பூண்டு மாமிச தாவரப் பகுதிகளிலிருந்து உண்டாக்கப்படும் நானாவித பண்டங்கள். அவையாவன : சுங்கான்கள், குடைகள், ஊன்று கோல்கள், தூரிகைகள், துணிகள், வடங்கள், முறுக்கிய நூல்கள், பொத்தான்கள், பொதி கட்டுவதற்கான பலவித இழைகள், மற்றும் வேறு பொருட்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**PERMAPRESS**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 32969 பதிவுசெய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ௵ செப்டெம்பர் ௴ 19 ந் உ.

8–1200/1—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32847. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜூலை மாதம் 17 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஹென்ற்லி காமென்ற்ஸ் லிமிட்டட் ; இலங்கையின் கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் முறையாக இணைக்கப்பட்டதோர் கம்பெனி, இல. 10, பழைய விமான நிலைய வீதி, இரத்மலானை என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திரு. ஜே. ஈ. செனிவிரத்ன, கொள்ளுப்பிட்டி ஒழுங்கை, கொழும்பு 3. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச் சரக்கு : மற்ற வகுப்புகளினுள்ளடங்காத யானைத் தந்தங்களினால் அல்லது மரம், புல், பூண்டு, மாமிச தாவரப் பகுதிகளிலிருந்து உண்டாக்கப்படும் நானாவித பண்டங்கள். அவையாவன : சுங்கான்கள், குடைகள், ஊன்று கோல்கள், கூந்தல்களுக்கான தூரிகைகள், சீப்புகள், தளவாடப் பூச்சுக்கள், தட்டங்களைச் சுத்திகரிக்கும் மா, கீல் பூசிய சித்தான்கள், கூடாரமடிக்கும் துணிகள், வடங்கள், முறுக்கிய நூல்கள், பொத்தான்கள், பொதி கட்டுவதற்கான பலவித இழைகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**HENTLEY**

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ௵ ஓகஸ்டு ௴ 29 ந் உ.

8–1200/2—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. 34344. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஜூன் மாதம் 13 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : மிச்சலின் அன்டு சை (கொம்பக்னி ஜெனரலி டெஸ் எஸ்ராபிளிஷ்மென்ற்ஸ் மிச்சலின்) பிரான்ஸ் நாட்டுச் சட்டங்களிற்கிணங்க இணைக்கப் பெற்றதோர் சங்கம், இல. 55பீ88, கெலமன்ற்—பெரான்ட், பிரான்ஸ் என்ற முகவரியில் தனது பதிந்த அலுவலகத்தைக் கெண்டது, உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. இல. 1464, கொழும்பு. (5) வகுப்பு : 13. (6) வியாபாரச்சரக்கு : வாகனச் சக்கரங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**MICHELIN**

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ந் ௵ மார்ச் ௴ 7 ம் உ.

8–1207—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

(1) வியாபரச்சின்னம் இல. : 31910. (2) பெற்ற திகதி : 1969 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : மரிக்கார் லெப்பெ ஹமீட், "ஃபோர் ரோசெஸ் பீடிக் கம்பெனி" என்ற பெயரிலும் நடையிலும் வியாபாரம் செய்பவர், 4 ம் வட்டாரம், பிரதான வீதி, மூதூர் ; பீடி உற்பத்திசெய்பவர். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. இல. 1464, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : பீடிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "**F R B C O**" என்ற எழுத்துகள் உபயோகிப்பதற்கு ஏகபோக உரிமை வழங்கப்பட மாட்டாது.


கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ஆம் வருடம் மே மாதம் 9 ஆம் திகதி.

ஆர். எல். த சில்வா,
வியாாபரச்சின்னப் பதிவாளர்.

8–1208—31.08.73 ந் திகதிய் வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32707. (2) பெற்ற திகதி : 1970 ஆம் வருடம் மே மாதம் 26 ஆம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சிலோன் டுபாய்கோ கம்பெனி லிமிரெட், ஸ்ரீ லங்காவில் முறைப்படி நிறுவப்பட்டதோர் கம்பெனி, அவற்றின் பதிவு செய்த அலுவலகத்தை இல. 108, ஸ்கின்னர்ஸ் வீதி, வடக்கு, கொழும்பு 13 ஆகிய முகவரியில் பெற்றுள்ளது ; சிகரெட்டும், புகைக்கும் புகையிலையும் உற்பத்தி செய்பவர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : உற்பத்தியாக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்படாத புகையிலை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




(அ) இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "**FILTER**" என்ற சொல்லும், "3" என்ற இலக்கமும், "**ROSES**" என்ற சொல்லுடன் சேர்த்து உபயோகிக்க வேண்டுமே தவிர தனித்தனியே பிரயோகிப்பதற்கு ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

(ஆ) இவ்வியாபார உரிமை அடையாளம், 3499, 25119 ஆகிய எண்களையுடைய வியாபார உரிமை அடையாளங்களுடன் கூட்டுச் சேர்க்கப்படவிருக்கிறது.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ஆம் வருடம் ஓகஸ்டு மாதம் 18 ஆம் திகதி.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

8–1205—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

(1) வியாபாரச் சின்னம் இல. : 33091. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் அக்டோபர் மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : யூனியன் லேஸ் இன்டஸ்றீஸ் லிமிட்டட், கம்பெனிகளினது கட்டளைச் சட்டத்திற்கேற்ப நிறுவப்பட்டதோர் வரையிறுத்த பொறுப்புக் கம்பெனி, அவற்றின் பதிவுசெய்த அலுவலகத்தை இல. 81$\frac{3}{8}$, நாஹா கட்டடம், குமார வீதி, கொழும்பு 11 என்ற முகவரியில் ஏற்படுத்தியுள்ளது ; தயாரிப்பாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. எண். 1464, கொழும்பு 11. (5) வகுப்பு : 24. (6) வியாபாரச் சரக்கு : பருத்திப் புடவைத் துணிகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**F L O R A**

விண்ணப்பதாரர், இவ்வுரிமை அடையாளத்தைத் தாங்கிய வர்த்தமானப் பத்திரிகையின் பிரசுரமொன்று இதற்கு எதிராக எடுத்துக் காட்டிய வியாபார உரிமை அடையாள இல. 8920 ன் உரிமையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி, அதன் சார்பாக வியாபார உரிமைப் பதிவாளருக்கு தக்க சான்று சமர்ப்பித்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்கிணங்க இவ் வியாபார உரிமை அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு அக்டோபர் மீ 13 ந் வ.

8–1206—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. 33003. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 13 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : அத்துறுகிரி ஆரச்சிகே பொடிசிங்ஹோ அத்துறுகிரி, ஓகஸ்தஸ் ரஞ்சித் அத்துறுகிரி அன்டு உபாலி இந்திரசேன அத்துறுகிரி ("ரஷ்மி இன்டஸ்றீஸ்"), என்பதாக வியாபாரஞ் செய்பவர்கள்) இல. 118, பிரதான வீதி, பல்லவெல ; கனல் அடுப்புகள், மின்னியக்கப் பொருட்கள், கண்ணடிப் பொருத்துச் சட்டங்களின் உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 18. (6) வியாபாரச்சரக்கு : அடுப்புகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 14 ந் வ.

8–1204—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. 32240. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் டிசெம்பர் மாதம் 19 ம் திகதி. (3) விண்ணணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபாபென்ஃபபிரிக்கன் பேயர், ஐக்டியென் கெசல்ஷாப்ற் (ஜெர்மனியச் சட்டங்களின் அடிப்படையில் முறையாக நிறுவப்பட்டதோர் கம்பெனி) லிவர்குசென்–பேயர்–வர்க், மேற்கு ஜேர்மனி; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் த சில்வா அண்டு மென்டிஸ், த. பெ. இல. 884, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : மருந்துப்பாகசாலை ஆக்கத்தினது தயாரிப்புகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**B A Y O L I N**

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படுமிடத்து வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 2703, 15421, 19227, 20127, 22456, 24950, 27344 ஆகியவற்றுடனும் மற்றும் வியாபார உரிமை அடையாள இல. 31153, 32395 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடனும் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 1 ந் வ.

8–1202/1—31.08.73 ம் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32889. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஓகஸ்டு மாதம் 3 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அக்ஃபா–கெவர்ட், ஐக்டியென் கெசல்ஷாப்ற், (ஜெர்மனிய நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கம்பெனி) லிவர்குசென்–பேயர்வர்க், மேற்கு ஜெர்மனி ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் த சில்வா அண்டு மென்டிஸ், த. பெ. இல. 884, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : நிழற்பட அபிவிருத்தித் தயாரிப்புக்களும் சத்துக்களும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**R E F I N A L**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 1 ந் வ.

8–1202/2—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

(1) வியாபாரச் சின்னம் இல. 31446. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் மே மாதம் 17 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : நிச்சிபன் கோ, லிமிட்டட் (ஜப்பானியச் சட்டங்களின் அடிப்படையில் முறையாக நிறுப்பப்பட்டதோர் கம்பெனி) இல. 2–4, குடன் மிஞமி, 2 சோமி, சியோடா–கு, டோக்கியோ, ஜப்பான், உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அண்டு குலரத்ன, வழக்கறிஞர்கள், 75 2/5, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச்சரக்கு : சோடணைக் கடதாசி தவிர்ந்த கடதாசி, அலுவலகத் தளபாடங்கள், புத்தகம் கட்டுதலுக்கான சாதனங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் உருவம் :

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ.

8–1202/3—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

## வியாபார உரிமை அடையாள அறிவிப்பு

### பிழைதிருத்தம்

1972 ம் வருடம் ஓகஸ்ட் மாதம் 18 ம் திகதியிடப்பட்ட 21 ம் இலக்கத்தையுடைய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1969 ம் வருடம் ஓகஸ்டு மாதம் 16 ம் திகதியையுடைய வியாபார உரிமை அடையாள இல. 31789 சம்பந்தமான விளம்பரத்திற் காணப்படும் 3 வது புள்ளிவிபரம் பின்வருமாறு பிழைதிருத்தஞ் செய்து வாசிக்கப்படல் வேண்டும் :—

புள்ளிவிபரம் (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) பீச்சம் குறூப் லிமிட்டட், பீச்சம் றிசேச் லபோறற்றிஸ் என்பதாக வணிகஞ் செய்பவர், பீச்சம் ஹவுஸ், கிறேற் வெஸ்ற் வீதி, பிறேன்ற்ஃபர்ட், மிடில்செக்ஸ், இங்கிலாந்து, உற்பத்தியாளர்களும் வணிகர்களும்.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1972 ம் ஆண்டு நொவெம்பர் மீ 29 ந் வ.

8–1316—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

**இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.**

**குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—**குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்** அரசாங்க **அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால்** ஏற்றுக் **கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.**

அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 | |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.